FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | புவியியல் – I | இரண்டு மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் :..................................

அறிவுறுத்தல் :
- இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 30 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது.
- பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்.
- பகுதி I மற்றும் பகுதி IIஐ இரண்டு வினாத்தாள்களும் ஒன்றாகக் கையளிக்க வேண்டும்.

## பகுதி - I

❖ **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை புள்ளிக்கோட்டில் எழுதுக.**

01) 25 கிலோமீற்றர் நீளமான கால்வாய் ஒன்று 1: 50000 மெற்றிக் அளவுத்திட்டப் படத்தில் காட்டப்படும் அளவு
(1) 50 $cm$ (2) 100 $cm$ (3) 150 $cm$
(4) 200 $cm$ (5) 250 $cm$ (...........)

02) "புவியியலாளரின் ஆயுதம்" எனச் சிறப்பிக்கப்படுவது
(1) தரவுகள் (2) பூகோளம் (3) செய்மதி
(4) எறியம் (5) தேசப்படம் (...........)

03) தற்போது இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் எண்ணிலக்கப் படத்தின் அளவுத்திட்டம்
(1) 1 : 5000 (2) 1 : 10000 (3) 1 : 15000
(4) 1 : 20000 (5) 1 : 40000 (...........)

04) தரைத்தோற்ற அம்சங்களைக் குறித்துக் காட்டுவது
(1) பாறைத்தொடர், சுவடு, சேற்றுநிலம், மலையிடுக்கு
(2) மென்சாய்வு, குத்துச்சாய்வு, கடனீரேரி, காடு
(3) உட்கிடை, நீரிடைவெளி, சுவடு, குன்று
(4) வெளியரும்பு பாறை, பீடபூமி, மரநிகர் வடிகால், சுவடு
(5) காற்றிடைவெளி, குத்துச்சாய்வு, ஆறு, கடனீரேரி (...........)

05) புவியின் சுற்றுகையோடு இணைந்து தொழிற்படும் செய்மதி வகை
(1) முனைவுப்பாதைச் செய்மதி
(2) வானிலை அவதானிப்புச் செய்மதி
(3) இராணுவச் செய்மதி
(4) புவிநிலையச் செய்மதி
(5) விண்வெளி ஆராட்சி செய்மதி (...........)

06) புவியியல் தகவல் முறையின் இயக்கத்திற்கு அவசியமான உட்கூறு
(1) மென்பொருள் (2) தரவு (3) வன்பொருள்
(4) முறைமை (5) பயனிகள் (...........)

07) நவீன படவரைகலையில் ஏற்பட்ட பிரதான விருத்தியாக அமைவது
(1) படவரைகலை சனநாயகப்படுத்தப்பட்டது.
(2) படமாக்கலுக்கு புதிய நுட்பங்கள் பயன்படுத்தப்பட்டது.
(3) படவரைகலையில் புதிய எறியங்கள் பயன்படுத்தப்படுவது.
(4) படமாக்கலுக்கு புதிய குறியீடுகள் அறிமுகப்படுத்தப்பட்டமை.
(5) சமூக விஞ்ஞானத் துறைக்கு அதிகம் பிரயோகிக்கின்றமை. (...........)

08) இலங்கையின் மழைவீழ்ச்சி, மற்றும் வெப்பநிலை அளவுகளைக் காட்ட பொருத்தமான வரைபடம்
(1) கோட்டு நிரல் வரைப்படம்
(2) இரட்டைப் பார் வரைப்படம்
(3) பல்கோட்டு வரைப்படம்
(4) சமகணியப் படம்
(5) கூட்டுபார் வரைப்படம் (...........)

09) தரவுத் தொகுதி ஒன்றின் சராசரி பெறுமானம்
(1) ஆகாரம் (2) இடை (3) இடையம்
(4) காலணை (5) விலகல் (...........)

10) தரவுத்தொகுதி ஒன்றில் ஓர் எண் அதிக தடவை வருமாயின் அவ்வாகாரம்
(1) ஓராகாரம்
(2) ஈராகாரம்
(3) பூச்சிய ஆகாரம்
(4) பல்லாகாரம்
(5) மூவாகாரம் (...........)

11) மூன்றாம் நிலைச் சுற்றோட்டத்தில் உள்ளடங்கும் காற்றுக்கள்
(1) சமகால காற்று, சூறாவளி, ரொனாடோ
(2) பருவக்காற்று, தரைக்காற்று, கடற்காற்று
(3) ஓரிடக்காற்று, போன்காற்று, மினிப்புயல்
(4) வியாபாரக் காற்று, மேலைக்காற்று, முனைவுக் காற்று
(5) மலைக்காற்று, புயல், சூறாவளி (...........)

12) இலங்கையின் ஈரவலயத்தில் அதிகம் காணப்படும் மண்வகை
(1) செங்கபில லற்றசோல்ஸ்
(2) ரெகோசோல்ஸ்
(3) செம்மஞ்சல் லற்றசோல்ஸ்
(4) செம்மஞ்சல் பொட்சோலிக்
(5) கல்சியமற்ற கபிலநிற லோம்மண் (...........)

13) உலக காலநிலை மாற்றத்தினை ஏற்படுத்தும் இயற்கைக் காரணிகள்
(1) ஞாயிற்று புள்ளி வட்டச் செயற்பாடு, எரிமலை, எல்நினோ
(2) பச்சைவீட்டு விளைவு, காடழிப்பு, எரிமலை
(3) எரிமலை, ஞாயிற்று புள்ளி வட்டச் செயற்பாடு, கைத்தொழில்
(4) காட்டுத்தீ, எரிமலை அணுகுண்டு பரிசோதனை
(5) கால்நடை வளர்ப்பு, ஈரநிலம், வானினோ (...........)

14) மத்தியகோட்டுப் பகுதியில் வியாபாரக் காற்றுக்களை ஒருங்கவிடாது காணப்படும் நிலைமாறு வலயம்
(1) தாழமுக்க வலயம்
(2) உயரமுக்க வலயம்
(3) அமைதி வலயம்
(4) அயன இடை ஒருங்கல் வலயம்
(5) அயன அயல் வடிவம் (...........)

15) இலங்கையில் ''நகர ஈரநிலம்'' காணப்படும் இடங்கள்
(1) யாழ்ப்பாணம், காலி, களுத்துறை
(2) நீர்கொழும்பு, கொழும்பு, வவுனியா
(3) அனுராதபுரம், மட்டக்களப்பு, புத்தளம்
(4) சிலாபம், திருகோணமலை, பொலநறுவ
(5) களுத்துறை, மட்டக்களப்பு, கேகாலை (...........)

16) சமுத்திரத் தகடுகளாக காணப்படுவன
(1) அந்தாட்டிக்க தகடு, பசுபிக் தகடு
(2) பிலிப்பைன்ஸ் தகடு, யுரேசியன் தகடு
(3) பசுபிக் தகடு, பிலிப்பைன்ஸ் தகடு
(4) இந்தோஅவுஸ்ரேலிய தகடு, பசுபிக் தகடு
(5) வட அமெரிக்க தகடு, ஆபிரிக்க தகடு (...........)

17) இலங்கையில் இரும்புத்தாதுப் படிவுகள் கண்டுபிடிக்கப்பட்ட இடங்கள்
(1) சேருவில, எலகர
(2) பனிரெண்டாவ, விலகெதர
(3) பணிரெண்டாவ, சேருவில
(4) வெல்லஸ்ஸ, எலகர
(5) மீடியாகொட ஒருவல (...........)

18) இலங்கையின் மொத்த நிலப்பரப்பில் 16% இனை வடிநிலப்பரப்பாக கொண்ட நதி
(1) களனிகங்கை
(2) களுகங்கை
(3) ஜின்கங்கை
(4) மகாவலிகங்கை
(5) வளவகங்கை (...........)

19) கண்டத்தகடும், சமுத்திரத் தகடும் ஒருங்கும் தகட்டெல்லை பகுதியில் தோன்றும் இரு பிரதான நில உருவங்கள்
(1) நடுச்சமுத்திரப் பாறைத்தொடர், எரிமலைக்குன்று
(2) சமுத்திர அகழி, எரிமலைக் குன்று
(3) பிளவுப் பள்ளத்தாக்கு, எரிமலைக்குன்று
(4) மடிப்பு மலை, குறைகள்
(5) கடற்தரை, சமுத்திர அகழி (...........)

20) பாலைவனப் பகுதிகளில் தோற்றம் பெறும் உப்பு ஏரிகளை வட அமெரிக்காவில் அழைக்கும் பெயர்
(1) பிளயாஸ் (2) வாடிஸ் (3) பஜாடா
(4) குவிவரை (5) சொட்ஸ் (...........)

21) இலங்கையில் அதிகளவிலான குடிப்பெயர்வாளர்கள் வதியும் மாகாணம்
(1) வடக்கு மாகாணம் (2) தென் மாகாணம் (3) மேல் மாகாணம்
(4) கிழக்கு மாகாணம் (5) வடமேல் மாகாணம் (...........)

22) சீனா உலக மொத்த சனத்தொகை கொண்டிருக்கும் சதவீதம்
(1) 15 % (2) 17% (3) 19 %
(4) 21 % (5) 23 % (...........)

23) ஒரு லட்சத்திலிருந்து பத்து லட்சம் வரை மக்கள் தொகையைக் கொண்ட நகரங்கள்
(1) சிறு நகரம்
(2) நடுத்தர நகரம்
(3) பெருநகரம்
(4) மில்லியன் நகரம்
(5) மெகாநகரம் (...........)

24) சார்க் அமைப்பில் புதிதாக இணைய விருப்பம் தெரிவித்திருக்கும் நாடு
(1) மியன்மார்
(2) ரஷ்யா
(3) சீனா
(4) தாய்லாந்து
(5) வியட்னாம் (...........)

25) உஜாமா மற்றும் கிபுட்ஸ் எனும் குடியிருப்பு வகை
(1) மையக்கருக் குடியிருப்புக்கள்
(2) நேர்கோட்டு குடியிருப்புக்கள்
(3) சிதறிய குடியிருப்புக்கள்
(4) வரள்புள்ளிக் குடியிருப்புக்கள்
(5) திட்டமிட்ட குடியிருப்புக்கள் (...........)

26) ஐக்கிய அமெரிக்காவின் இரும்புருக்கு கைத்தொழில் வீழ்ச்சிக்கான பிரதான காரணம்
(1) இரும்புருக்குப் பகுதிகளில் தொழிலாளர் சங்கங்களின் விருத்தி
(2) இரும்புத்தாது குறைவடைந்தமை
(3) நிலக்கரிப் படிவுகள் பற்றாக்குறையாக காணப்பட்டமை
(4) தொழிலாளரின் வினை திறனின்மை
(5) சூழல் மாசடைவு அதிகமாக ஏற்பட்டமை (...........)

27) ஒவ்வொரு வருடமும் யூலை - 11 இல் அனுஷ்டிக்கும் சர்வதேச தினம்
(1) உலக குடியிருப்பு தினம்
(2) உலக நீர் தினம்
(3) உலக ஓசோன் தினம்
(4) உலக குடித்தொகை தினம்
(5) உலக உணவு தினம் (...........)

28) உலக சமயத்தவர்களினை ஏறுவரிசைப்படுத்தினால்
(1) கோன்பியுசஸ், இஸ்லாமியர், இந்துக்கள், கத்தோலிக்கர்
(2) கத்தோலிக்கர், இந்துக்கள், இஸ்லாமியர், கோன்பியுசஸ்
(3) பௌத்தர், கோன்பியுசஸ், இஸ்லாமியர், கத்தோலிக்கர்
(4) கோன்பியுசஸ், இந்துக்கள், இஸ்லாமியர், கத்தோலிக்கர்
(5) கத்தோலிக்கர், இஸ்லாமியர், இந்துக்கள், பௌத்தர் (...........)

29) உலகில் விவசாய விதை உற்பத்தி, பூச்சி கொல்லி களை கொல்லி தயாரித்தலில் முதன்மை பெறும் பல்தேசிய கம்பனி
(1) காகிஸ்
(2) கெல்ஜின்
(3) சீபா
(4) கெய்சி
(5) மொன்சண்டே (...........)

30) உலகின் தங்க உற்பத்தியில் முதன்மை பெறும் நாடுகள்
(1) அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, சீனா
(2) தென் ஆபிரிக்கா, ஐக்கிய அமெரிக்கா, அவுஸ்ரேலியா
(3) சீனா, ஐக்கிய அமெரிக்கா, ரஷ்யா
(4) தென் ஆபிரிக்கா, சீனா, ரஷ்யா
(5) அவுஸ்ரேலியா, ஐக்கிய அமெரிக்கா, கனடா (...........)

யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, மார்ச் - 2016**

**Term Examination, March - 2016**

FWC

**தரம் :- 13 (2016)** **புவியியல் – I**

பகுதி - **II**

**mwpTWj;jy;fs;:-**

- **Kjyhk; tpdhtpw;Fk; 2 Mk; 3 Mk; tpdhtpypUe;J xU tpdhitAk; Nju;e;njLj;J ,uz;L tpdhf;fSf;F tpil jUf.**

➢ **இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட 1:50000 எனும் அளவுத் திட்டத்திலான மட்டக்களப்பு இடவிளக்கவியற் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. இப்படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களிற்கு விடை அளிக்க.**

**குறிப்பு :-**

✶ படத்தில் விடைகள் எழுதப்படலாகாது.
✶ உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.
✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தையும், உபபிரிவு இலக்கத்தையும் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

01) (i) படத்தில் (A), (B), (C), (D), (E), (F) எனக் குறித்துக் காட்டப்பட்ட அம்சங்களை இனங் கண்டு பெயரிடுக. (3 புள்ளிகள்)

(ii) படப்பிரதேசத்தில் (1) என இலக்கமிடப்பட்ட பகுதியில் காணப்படும் நான்கு வீதிகளினைப் பெயரிடுக. (2 புள்ளிகள்)

(iii) படப்பிரதேசத்தில் உள்ள A (15) பிரதான வீதியின் நீளத்தை கிட்டிய கிலோமீற்றரில் தருக. (2 புள்ளிகள்)

(iv) படப்பிரதேசத்தில் (1) என அடைப்பிட்ட பகுதியினை 1:25000 எனும் அளவுத்திட்டத்திற்கு அதன் சட்டகத்தை மட்டும் வரைக. (2 புள்ளிகள்)

(v) படப்பிரதேசத்தில் அதிகளவு செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிரினை பெயரிட்டு அதன் பரம்பலில் செல்வாக்குச் செலுத்திய இரு காரணிகளை ஆராய்க. (3 புள்ளிகள்)

(vi) படப்பிரதேசத்தின் கரையோரப் பகுதியில் அபிவிருத்தி செய்யக்கூடிய பொருளாதார நடவடிக்கைகள் இரண்டினை விளக்குக. (3 புள்ளிகள்)

(vii) படப்பிரதேசத்தில் (2) என அடைப்பிட்ட பகுதியில் உள்ள “மொறக் கொட்டாஞ்சேனை ஒரு சேவை மையமாக காணப்படுவதில் செல்வாக்குச் செலுத்திய மூன்று காரணிகளை விளக்குக. (5 புள்ளிகள்)

02) (i) புவியியல் தகவல் ஒழுங்கு என்பதனை சுருக்கமாக விளக்குக. (4 புள்ளிகள்)

(ii) புவியியல் தகவல் ஒழுங்குப் படத்திற்கும், படமொன்றிற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளை விபரிக்குக. (5 புள்ளிகள்)

(iii) தொலை உணர்வுத் தொழில் நுட்பத்தின் நான்கு பயன்பாடுகளை விபரிக்குக. (5 புள்ளிகள்)

(iv) செய்முறைப் புவியியலில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட படமாக்கல் முறையின் மூன்று பண்புகளை விபரிக்குக. (6 புள்ளிகள்)

03) **இலங்கையின் நெல் உற்பத்தி (மெற்றிக்தொன்)**

**அட்டவணை I**

| **வருடம்** | **பெரும்போகம் (1000)** | **சிறுபோகம் (1000)** |
|---|---|---|
| 1992 | 1630 | 710 |
| 1993 | 1692 | 818 |
| 1994 | 1670 | 1014 |
| 1995 | 1761 | 1049 |
| 1996 | 1331 | 730 |
| 1997 | 1457 | 782 |
| 1998 | 1781 | 911 |
| 1999 | 1736 | 1121 |
| 2000 | 1781 | 1078 |
| 2001 | 1631 | 1082 |

மூலம் :- கமத்தொழில் அமைச்சு

(i) அட்டவணை I இல் உள்ள தரவினைப் பயன்படுத்தி கூட்டுபார் வரைபடம் ஒன்றினை அமைக்க. (10 புள்ளிகள்)

(ii) வரைபிலிருந்து இலங்கையில் நெல் உற்பத்தியின் போக்கினை சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)

(iii) அட்டவணை ஒன்றில் தரப்பட்ட தரவுகளினை காட்டுவதற்கு கூட்டுபார் தவிர்ந்த பிறிதொரு பொருத்தமான படவரைகலை முறையினை புனையா வரைபடத்துடன் சுருக்கமாக விளக்குக. (5 புள்ளிகள்)